# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 18 செவ்வாய்க்கிழமை 02.07.2024 கதிர் 288



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
யாழ் முற்றம்
Yarl Muttram
Youtube Channel






# அதிகாரப் பகிர்வு தொடர்பாக சம்பந்தனிடம் தனித்துவமானதொரு நிலைப்பாடு இருந்தது!

## நாடாளுமன்றில் ஜனாதிபதி தெரிவிப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், மறைந்த நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் எப்பொழுதும் இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாட்டிற்காக பங்காற்றியதாகவும், அதிகாரப் பகிர்வு மேற்கொள்ளப்பட வேண்டிய விதம் தொடர்பில் அவருக்கு தனியான நிலைப்பாடு இருப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

2➤

# யாழ் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு எதிராக சிவசேனை அமைப்பினர் இன்று போராட்டம்!



புதிதாகக் கடமையேற்ற யாழ்ப்பாண வலயக் கல்வி பணிப்பாளருக்கு எதிராக சிவசேனை அமைப்பினரால் இன்று ஆளுநர் அலுவலகத்துக்கு முன்பாக போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது

யாழ்ப்பாண வலையக் கல்விப் பணிப்பாளராக கடந்த வாரம் பொறுப்பேற்று, பொறுப்பேற்ற முதற் தினத்திலேயே வலயக் கல்விப் பணிமனையில் இருந்த சைவக்கடவுள்களின்திருவுருவப்படங்களை அகற்றிய கல்விப் பணிப்பாளர் பிறட்லீ அவர்களை உடனடியாக யாழ் கல்வி வலயத்தில் இருந்து வெளியேற்றுமாறு கோரி இன்று வடமாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக இந்து அமைப்புக்கள் சேர்ந்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதே இடத்தினில் இந்து கடவுள்களின் படத்தினை மீண்டும் வைப்பதோடு மட்டும் இதனை விட்டுவிட முடியாது, இந்தப் பிழையினை சரி செய்து விட முடியாது.


பதில் கடமையாற்ற வந்த உடனேயே இவர் நடந்து கொண்டதிலிருந்து, இப்படிப்பட்ட மதவாத சிந்தனை உடைய இவரினால்நேர்மையானதொரு சேவையினை யாழ் கல்விப் புலத்திற்கு வழங்க முடியாது என்பது தெளிவாகவே புலப்படுகிறது.

இவரினால் இந்து மாணவர்கள், இந்து ஆசிரியர்கள், இந்து பாடசாலைகள் என்று பலதரப்பு பலவகையினில் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கப்படும்

2➤

# கடன் மறுசீரமைப்பின் ஊடாக மீண்டும் சர்வதேசத்தில் இலங்கையின் நம்பிக்கை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது!

## நிதி ராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய



கடன் மறுசீரமைப்பின் ஊடாக மீண்டும் சர்வதேசத்தில் இலங்கையின் நம்பிக்கை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக நிதி ராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்

கடன்மறுசீரமைப்பு தொடர்பாக இன்று ஊடகங்களுக்கு கருத்துரைக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில், நாட்டில் கடந்த காலங்களில் பாரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. நெருக்கடி நிலையில் இருந்து மீள்வதற்கு கடந்த 16 சந்தர்ப்பங்களில் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை நாடியிருந்த போதிலும்எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஒப்பந்தம் தொடர்பான அறிக்கை நாடாளுமன்றில் முன்வைக்கப்படவில்லை.

நாடு பெற்றுக்கொண்ட கடனை மீளச் செலுத்தாமையினாலேயே கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் பாரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது.

எமது நாட்டை பொறுத்தவரையில் நூற்றுக்கு 75 வீத ஏற்றுமதி - இறக்குமதி சார்ந்த வர்த்தகமுறைமை காணப்படுகின்றது.

ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் இரண்டு வாரங்களுக்கு ஸ்தம்பிதமடைந்தால் முழு வர்த்தகமும் முடங்கும் நிலை

2➤

# சம்பந்தனின் மரணம் நாட்டுக்கும் மக்களுக்கும் பாரிய இழப்பாகும்

## நாடாளுமன்றில் சஜித் தெரிவிப்பு



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின்பெருந்தலைவருமான இரா.சம்பந்தன் எம்.பியின் மறைவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இரங்கல் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாட்டின் ஐக்கியம், ஆள்புல ஒருமைப்பாட்டுக்காகத் தொடர்ந்து முன்னிருந்த இரா. சம்பந்தனின் திடீர் மரணம் தொடர்பில் தனது கவலையைத் தெரிவிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இன்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், "சம்பந்தனின் மரணம் எமது நாட்டுக்கும் மக்களுக்கும் பாரிய இழப்பாகும். அவர் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தேசியத் தலைவராகச் செயற்பட்டார்.

தேசியத்துவம்

2➤

# அரசாங்கம் கவிழ்வதற்கு இடமளிக்க மாட்டோம்! நாமல் ராஜபக்ஷ எம்.பி. உறுதிபடத் தெரிவிப்பு



*தேர்தலொன்றை நடத்தி முடிவெடுக்கும் வரை இந்த அரசாங்கம் கவிழ்வதற்கு இடமளிக்க மாட்டோம்என ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாடாளுமன்றஉறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.*

*ஜனாதிபதித் தேர்தலோ, நாடாளுமன்றத் தேர்தலோ அல்லது எடுக்கப்படும் அரசியல் தீர்மானங்களின் அடிப்படையில் இது தொடர்பில் தீர்மானிக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.*

*ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேர்தல் தொகுதிமாநாட்டில்கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.*

*மேலும் அவர் தெரிவிக்கையில், கொள்கையளவில் பல விடயங்களில் ஜனாதிபதியுடன் எமக்கு உடன்பாடில்லாத போதிலும், நாட்டின் பாதுகாப்பிற்கு ஸ்திரமான அரசாங்கம் அவசியம் என்ற நிலைப்பாட்டில் இருந்து அரசாங்கத்திற்கு ஆதரவளித்தது போலவே தொடர்ந்து ஆதரவளிப்போம். இதற்கு அடுத்த கட்டமாகவே தேர்தல்கள் தொடர்பில் விரிவான பேச்சுவார்த்தைகள் நடத்த வேண்டியிருப்பதாகவும் தெரிவித்தார்.*

*(ரெஜ-03)*

**கடன்.....**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஏற்படும். எனவே கடன்மறுசீரமைப்பின் ஊடாக மீண்டும் சர்வதேசத்தில் இலங்கையின் நம்பிக்கை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

உலக நாடுகளுடன் நம்பிக்கையுடன் பொருளாதார வேலைத்திட்டங்களை முன்னெடுத்து செல்வதற்கான சூழ்நிலை ஏற்படும்.

இதன் பலாபலன்கள் நாட்டு மக்களை சென்றடையும். இலங்கையில் இடைநடுவில் கைவிடப்பட்ட வர்த்தக திட்டங்களை மீள ஆரம்பிக்க எதிர்ப்பார்த்துள்ளதாக ஜப்பான் மற்றும் சீனா ஆகிய நாடுகள் அறிவித்துள்ளன - என்றார். (04)

**யாழ்.வலயக்....**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வாய்ப்பும் அதிகளவிலேயே உள்ளது. அவரது மதவாத மனநிலை சார்ந்து தீவிர விசாரணையும், இடமாற்றத்தோடு கூடிய தகுந்த தண்டனையும் வழங்கப்படவேண்டும்.

இந்துக்கடவுள்களினை அவமதித்ததனால் உலக இந்து மக்களிடம் முறையாக ஊடகங்கள் வாயிலாக பொது மன்னிப்பும் கேட்கவேண்டும் - என கோரப்பட்டது.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் பதாகைகளை தாங்கியவாறு கோஷம் எழுப்பி ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது

**அதிகாரப்....**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இரா.சம்பந்தனின் மறைவு தொடர்பில் நாடாளுமன்றத்தில் இன்று விசேட உரையொன்றை நிகழ்த்திய போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், "அன்று என்னுடன் நாடாளுமன்றத்திற்கு வந்தவர்களில் எஞ்சியிருந்த எனது சகாக்களில் ஒருவரான சம்பந்தன் இப்போது எங்களுடன் இல்லை.

மிகவும் கடினமான காலகட்டங்களில் அவருடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவர் ஆற்றிய பங்களிப்பை நன்றியுடன் நினைவு கூர்கிறேன். அவர் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி (TULF) மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (TNA) ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்திய போதிலும், அவர் எப்போதும் இலங்கையின் ஆட்புல ஒருமைப்பாட்டிற்காகப் பங்காற்றினார்.

ஒருமுறை அவர் என்னுடன் உரையாற்றும் போது "ரணில், நான் நாட்டைப் பிரிப்பேன் என்று நினைக்கிறீர்களா? நான் சிறுவனாக இருந்த போது, 1948 இல் நாடு சுதந்திரம் பெறுவதைப் பார்க்கச் சென்றிருந்தேன்!" என்று அவர் என்னிடம் குறிப்பிட்டார்.

அதனைக் காணும் வாய்ப்பு எங்களுக்குக் கிடைக்கவில்லை. நம்மில் பலர் அப்போது பிறக்கவே இல்லை.

அதிகாரப் பகிர்வு தொடர்பில் அவர் தனித்துவமான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார். அதைப் பற்றி விவாதம் செய்ய அவசியமில்லை. அவர் அதற்கான போதுமான பங்கைச் செய்துள்ளதாக நினைக்கிறேன். அதனை நிறைவு செய்ய இன்னும் கொஞ்சம் பங்காற்ற வேண்டியுள்ளது.

அந்த வேலைகளை நிறைவு செய்வதே அவருக்குச் செய்யக்கூடிய மிக உயர்ந்த பங்களிப்பாக இருக்கும்" என்று தெரிவித்துள்ளார். (04)

**சம்பந்தனின்...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொடர்பில் அவர் தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வந்தார்.

அவர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இன, சமய, குல பேதமின்றி சகலரையும் ஒரே மாதிரியாக மதித்து பழகிய தலைவராவார்" - என்றார்.



## சம்பந்தனின் புகழுடலுக்கு எதிர்க்கட்சித் தலைவர் அஞ்சலி

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் இராஜவரோதயம் சம்பந்தனின் புகழுடல் இன்று பொரளை கொழும்பு - பொரளை ஏ.எவ்.றேமண்ட்ஸ் மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அங்கு சென்று சம்பந்தனின் புகழுடலுக்குத் தனது மரியாதையையும் அஞ்சலியையும் செலுத்தினார். (05)

# இயக்கச்சியில் மதுபானசாலைக்கு எதிராக இன்று காலை மக்கள் கண்டன ஆர்ப்பாட்டம்!

கிளிநொச்சி மாவட்ட பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட இயக்கச்சி சந்தியில் புதிதாக மதுபான சாலை ஒன்று அமைக்கப்படவுள்ளதையடுத்து கிராம மக்கள் அமைப்புக்கள் இணைந்து எதிர்ப்பு கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டமானது இன்று காலை 10 மணியளவில் இயக்கச்சி சந்தி ஏ 9 வீதிக்கு அருகே இடம்பெற்றிருந்தது.

குறித்த மதுபான சாலை அமைய இருக்கும் இடத்திலிருந்து சுமார் 50 மீற்றர் தொலைவில் பாடசாலை அமைந்துள்ளதையும் எதிரில் கோவில், இயக்கச்சி பொதுச்சந்தை என அதிகளவில் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் கூடுகின்ற இடமாகவுள்ளதாகவும் குறித்த இடத்தில் பேருந்து தரிப்பிடம் ஒன்று உள்ளதெனவும் அதில் தூர பிரதேசங்களில் இருந்து வரும் பாடசாலை மாணவர்கள் பேருந்துக்காக காத்திருக்கும் இடமாக உள்ளது எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறித்த இடத்தில் மதுபானசாலைக்கு அனுமதி வழங்கினால் பல குற்றச்செயல்கள் இடம்பெறும் எனவும் பாடசாலை மாணவர்களுக்கான பாதுகாப்பும் கிடைக்கபெறாது எனவும் தெரிவித்துள்ளனர்.

குறித்த போராட்டத்தின் போது இயக்கச்சி பகுதியில் அமைந்துள்ள அனைத்து கடைகளும் போராட்டத்தின் போது கதவடைத்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர்.

போராட்டத்தின் முடிவில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் மற்றும் பளை பொலிஸ் பொறுப்பதிகாரி மற்றும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பளை பிரதேச அமைப்பாளரிடமும் மகஜர் ஒன்றையும் கையளித்திருந்தனர். (02)

# மின்சாரக் கட்டணம் குறைத்தல் 15 ஆம் திகதி அறிவிக்கப்படும்

### பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவிப்பு

மின்சாரக் கட்டணக் குறைப்பு எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் மங்கள பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். அதன்படி, மின் கட்டண திருத்தம் குறித்த இறுதி முடிவு எதிர்வரும் 15 ஆம் திகதி அறிவிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எழுத்து பூர்வமான மக்களின் கருத்தறியும் காலம் இம்மாதம் 8 ஆம் திகதியுடன் முடிவடைவதுடன், அதற்கு மறுதினம் (9 ஆம் திகதி) வாய்மொழி மூலமான கருத்தறிதல் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதுடன், வாய்மூலக் கருத்துக்களை தெரிவிக்க விரும்புவோர் 0770126246 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு முன்கூட்டியே பதிவு செய்ய வேண்டும் எனவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வாய்மூல மற்றும் எழுத்து மூலமான கருத்துக்களை பரிசீலனை செய்த பின்னர் ஆணைக்குழுவின் இறுதி முடிவு இம்மாதம் 15 ஆம் திகதி அறிவிக்கப்படும் எனவும், அன்றைய தினம் மின் கட்டணம் குறைக்கப்படும் விதம் மற்றும் அமுலுக்கு வரும் திகதியும் அறிவிக்கப்படும் எனவும் ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ரெஜ-04)

## எந்தவொரு தேர்தலுக்கும் அரசாங்க அச்சகம் தயார் நிலையில் உள்ளது

### அரசாங்க அச்சக அதிகாரி

எதிர்வரும் தேர்தலையொட்டி அச்சிடும் பணிகளுக்கு தேவையான செலவுகளை மதிப்பிடுவதற்கான ஆரம்பகட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அரசாங்க அச்சக அதிகாரி கங்கானி கல்பனா லியனகே தெரிவித்துள்ளார். அரசாங்க அச்சகம் குறிப்பிட்ட ஒரு தேர்தலுக்கு மட்டும் என்றல்ல, எந்தவொரு தேர்தல்களுக்கேனும் தேவையான அச்சுப் பணிகளுக்கு தயாராகவே உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். எனவே, தேர்தலுக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, உரிய அறிவுறுத்தல்களுக்கமைய எந்த சந்தர்ப்பத்திலும் அச்சடிக்கும் பணிகளை மேற்கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரெஜ-06)




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# நாதஸ்வர மேதை கலாநிதி எம். பஞ்சாபிகேசனுக்கு சாவகச்சேரியில் இடம்பெற்ற நூற்றாண்டு விழா







யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட நாதஸ்வர மேதை கலாநிதி எம். பஞ்சாபிகேசனனின் நூற்றாண்டு விழா நேற்று சாவகச்சேரியில் பல நூற்றுக்கணக்கான இசை ஆர்வலர்களின் பங்கேற்புடன் கோலாகலமாக இடம்பெற்றது.

மருத்துவர் எஸ்.எஸ். அருளானந்தம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சங்கத்தானை இராக்கச்சி அம்மன் ஆலயத்தின் முன்பாக அமைந்துள்ள பஞ்சாபிகேசன் வாழ்ந்த இல்லத்தில் அவரது திருவுருவச் சிலை திறந்து வைக்கப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிலையைத் திரைநீக்கம் செய்து வைத்தார்.

தொடர்ந்து இராக்கச்சி அம்மன் ஆலயத்தில் இருந்து பஞ்சாபிகேசனின் திருவுருவப்படம் மங்கலப் பொருட்களுடன் நாற்பதுக்கும் மேற்பட்ட நாதஸ்வரத் தவில் கலைஞர்களின் இசை ஆராதனையுடன் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு எடுத்துவரப்பட்டது.

நிகழ்வில் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் ஆசியுரையையும் ஆசிரியர் த. பரமானந்தம் தொடக்கவுரையையும் ஆற்றினர். பேராசிரியர் என். சண்முகலிங்கன், பேராசிரியர் அ. சண்முகதாஸ்., சட்டத்தரணி கே. சயந்தன், யாழ். பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர் கிருபாசக்தி கருணா ஆகியோர் சிறப்புரைகளை ஆற்றினர். நாதஸ்வரக்கலை பற்றிய சிறப்புக்கட்டுரைகளை உள்ளடக்கிய எம்பஞ்சாபிகேசன் என்ற நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது. இதன் வெளியீட்டுரையை செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் வழங்கினார்.

நிகழ்வில் மூத்த நாதஸ்வரக் கலைஞர் பிச்சையப்பா ரஜீவன், தவில் கலைஞர் தெட்சணாமூர்த்தி உதயசங்கர் ஆகியோர் பஞ்சாபிகேசன் நினைவு தங்கப்பதக்க விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். பஞ்சாபிகேசனுடன் நீண்டகாலம் பணியாற்றிய கலைஞர்கள் வரிசையில் தவில் வித்துவான் ச.முருகையா நாதஸ்வர வித்துவான் த.கோபாலசாமி ஆகியோர் பொற்கிழி வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

புகழ்பூத்த நாதஸ்வர தவில் வித்துவான்கள் பங்கேற்ற இரண்டு கச்சேரிகள், பஞ்சாபிகேசனின் பேர்த்தி இசையாசிரியர் நிருத்திகா சுஜீவனின் பாட்டு, இந்துக் கல்லூரி மாணவிகளின் நடனம் எனப் பல நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்துக் கல்லூரி அதிபர் வரவேற்புரையையும் கவிஞர் ச. மார்க்கண்டு கவி வாழ்த்தையும் வழங்கினர். நிகழ்வுகளை அதிபர் வை.விஜயகுமாரன் தொகுத்து வழங்கினார்.




## யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்திற்கு புதிய நிர்வாகம் தெரிவானது

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்திற்குப் புதிய நிர்வாகக் குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 30 ஆம் திகதி ஞாயிறன்று யாழ். நகரில் உள்ள தனியார் விடுதியில் இடம்பெற்ற பொதுச்சபைக் கூட்டத்தில் பெருந்தலைவராக பேராசிரியர் அ.சண்முகதாசும், தலைவராக பேராசிரியர் தி.வேல்நம்பியும், செயலாளராக செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசனும், பொருளாளராக லோ.துஷிகரனும் உபதலைவர்களாக அருட்பணி ஜெரோம் செல்வநாயகம், சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேல், பேராசிரியர் சி.செல்வரஞ்சிதம், பா.பாலகணேசன் ஆகியோரும் உபசெயலாளர்களாக கு.பாலசண்முகன், முனைவர் கி.அருட்செல்வி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

இருபத்தொரு உறுப்பினர்களைக் கொண்ட ஆட்சிக்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

இதேவேளை தமிழ்ச்சங்கத்திற்கான அலுவலகமாக கந்தர்மடம் குமாரசுவாமி வீதியில் உள்ள அறிவாலயத்தை (விரிவுரையாளர் சர்வேஸ்வரா இல்லம்) பயன்படுத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.




# பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் இருந்து ஹிஸ்புல்லா அமைப்பின் பெயரை நீக்கிய அரபு லீக்!

பயங்கரவாத அமைப்புகளின்பட்டியலில் இருந்து லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்பின் பெயரை அரபு நாடுகளின் கூட்டமைப்பான அரபு லீக் நீக்கியுள்ளது.

இது குறித்து அந்த அமைப்பின் துணைப் பொதுச் செயலர் ஹோஸம் ஸ ாகி எகிப்து தொலைக்காட்சியான 'அல்-கஹேறா'விற்கு தகவல் வழங்கியபோது, ஹிஸ்புல்லா படையை இதுவரை பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் சேர்த்திருந்தோம். இது, எங்கள் தர்மானங்களிலும் எதிரொலித்தது.

ஆனால், ஹிஸ்புல்லாக்களை பயங்கரவாதிகள் என்று அழைப்பதால் அவர்களுடன் தகவல் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள முடியாத நிலை உள்ளது. அந்த நிலையைப் போக்குவதற்காக, பயங்கரவாத அமைப்புகள் பட்டியலில் இருந்து ஹிஸ்புல்லா ஆயுதக் குழுவினரை நீக்க உறுப்பு நாடுகள் ஒப்புக்கொண்டுள்ளன, என்றார்.

எகிப்து, சவூதி அரேபியா, லெபனான், சிரியா உள்ளிட்ட 22 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட அரபு லீக், ஈரானால் உருவாக்கப்பட்ட ஹிஸ்புல்லா படையினரை பயங்கரவாதிகளாக கடந்த 2016 ஆம் ஆண்டு அறிவித்தது. இந்தச் சூழலில், இஸ்ரேலுக்கும்ஈரான்ஆதரவுடன் செயல்படும் மற்றோர் ஆயுதக் குழுவான ஹமாசுக்கும் இடையே கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி போர் தொடங்கியதிலிருந்து, அண்டை நாடான லெபனானில் இருந்து ஹிஸ்புல்லாக்கள் இஸ்ரேல் நிலைகள் மீது அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

அதற்குப் பதிலடியாக ஹிஸ்புல்லாக்கள் மீது இஸ்ரேல் ராணுவம் வான்வழித் தாக்குதல் நடத்திவருகிறது. இது, இரு தரப்பிலும் முழு போர் வெடிப்பதற்கான அபாயத்தை ஏற்படுத்தியுள்ளது. ஏற்கெனவே, இஸ்ரேலுக்கும் ஹிஸ்புல்லாக்களுக்கும் இடையே கடைசியாக கடந்த 2006 இல் நடைபெற்ற போரில் இரு தரப்பிலும் கடுமையான உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளது.

தற்போது ஹிஸ்புல்லா படை முன்பைவிட அதிக பலம் பெற்றுள்ள நிலையில் இரு தரப்பினருக்கும் இடையே மீண்டும் முழுப் போர் ஒன்று வெடித்தால் அது பேரழிவை ஏற்படுத்தும் என்று அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் எச்சரித்துவருகின்றன.

இந்தச் சூழலில், போரைத் தவிர்ப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்காகவே ஹிஸ புல்லாக்களை பயங்கரவாதிகள் பட்டியலில் இருந்து அரபு லீக் நீக்கியுள்ளதாகக் கருதப்படுகிறது. (04)

# கென்யாவில் மக்கள் போராட்டம் வன்முறையில் 39 பேர் மரணம்



கிழக்கு ஆபிரிக்க நாடான கென்யாவில் வரி உயர்வுச் சட்டமூலத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட மக்கள் போராட்டங்களில் ஏற்பட்ட வன்முறையில் சிக்கி இதுவரை உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 39 ஆக அதிகரித்துள்ளது.

இதனை அந்த நாட்டின் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது. பலர் காணாமல் போய் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் புதிய வரிச் சட்டத்தினை திரும்பப் பெறுவதாக அந்நாட்டு ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

எனினும் அவர் பதவி விலக வேண்டும் என்று மக்கள் தொடர்ந்து போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். (04)

# எல்பிஎல் தொடர் ஆரம்பமானது! தம்புள்ளையை வென்றது கண்டி

2024 ஆம் ஆண்டுக்கான லங்கா பிரீமியர் லீக் (எல்பிஎல்) கிரிக்கெட் தொடரின் முதல் போட்டி கண்டி பல்லேகல சர்வதேசக் கிரிக்கெட் மைதானத்தில் கண்டி பஃல்கன்ஸ் மற்றும் தம்புள்ள சிக்சர்ஸ் அணிகளுக்கிடையில் நடைபெற்றது.

போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது கண்டி பஃல்கன்ஸ் அணி. முதலில் துடுப்பாடிய தம்புள்ள சிக்சர்ஸ் அணி, தசுன் சானகவின் அபாரமான பந்துவீச்சில் தடுமாறியது. நான்கு ஓவர்களுள் 3 விக்கெட்களை அவர் கைப்பற்றினார். மொஹமட் ஹஸ்னைன் ஒரு விக்கெட்டை கைப்பற்ற நான்கு ஓவர்களில் 4 விக்கெட்ளை இழந்து தம்புள்ளை அணி தடுமாறியது. தனுஷ்க குணதிலக 11 ஓட்டங்களுடன் முதலில் ஆட்டமிழந்தார். நுவனிது பெர்னாண்டோ 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இருவரும் தநுன் சானக்கவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தனர். குஷல் பெரேரா ஓட்டமெதுவுமின்றி மொஹமட் ஹஸ்னைனின் பந்துவீச்சில் அடுத்து ஆட்டமிழந்தார். தசுன் சானக்கவின் பந்துவீச்சில் தொளஹித் ரிதோய் ஒரேயொரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார். இந்த ஆட்டமிழப்புகளுக்கு பின்னர் ஜோடி சேர்ந்த மார்க் சப்மன், சமிந்து விக்ரமசிங்க ஜோடி மிகச் சிறப்பாக இணைப்பாட்டம் ஒன்றை உருவாக்கி, தடுமாறிய அணியை மீட்டு எடுத்தனர். மார்க் சப்மன் ஆட்டமிழக்காமல் 91 ஓட்டங்களையும், சமிந்து விக்ரம்சிங்க ஆட்டமிழக்காமல் 62 ஓட்டங்களையும் பெற்றனர். இவர்கள் ஐந்தாவது விக்கெட் இணைப்பாட்டமாக 154 ஓட்டங்களை பகிர்ந்தனர். இந்த இணைப்பாட்டம் மூலம் 20 ஓவர்களில் 4 விக்கெட்ளை இழந்து தம்புள்ளை அணி 179 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

சமிந்து விக்ரமசிங்க கண்டி, புனித அந்தோனியார் பாடசாலையின் பழைய மாணவர் ஆவர். 20 வயதான இவரின் முதலாவது ரி-20 அரைச்சதம் இதுவாகும்.

180 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்குடன் தமது துடுப்பாட்டத்தை ஆரம்பித்த கண்டி அணி, இரண்டாவது பந்திலேயே அன்ட்ரே பிளெட்ச்சரின் விக்கெட்டை இழந்தது. தான் எதிர் கொண்ட முதல் பந்திலேயே அவர் ஆட்டமிழந்தார். மறுபக்கமாக டினேஷ் சந்திமால் நிலைத்து ஆடினார். மொகமட் ஹரிஸ் 5 ஓட்டங்களோடு முஸ்டபைசூர் ரஹ்மானின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அதன் பின்னர் ஜோடி சேர்ந்த டினேஷ் சந்திமால், கமிந்து மென்டிஸ் ஜோடி 56 ஓட்டங்களை மூன்றாவது விக்கெட் இணைப்பாட்டமாக பகிர்ந்து வெற்றிக்கான அடித்தளத்தை இட்டது.

கமிந்து 27 ஓட்டங்களை பெற்றார். சமிந்து விக்ரமசிங்கவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். டினேஷ் சந்திமால், அஞ்சலோ மத்தியூசுடன் இணைப்பாட்டத்தை உருவாக்க முனைந்த வேளையில் அகில தனஞ்சயவின் பந்துவீச்சில் 65 (40) ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அஞ்சலோ மத்தியூசுடன் ஜோடி சேர்ந்தார் தசுன் சாணக்க. இறுதி ஓவர்களை சிறந்த பந்துவீச்சாளர்கள் வீசிய போதும் சானக்க, மத்தியூஸ் ஜோடி அதிரடி நிகழ்த்தி வெற்றியை இலகுபடுத்தினர். மத்தியூஸ் 37 (20) ஓட்டங்களையும், தஸுன் சானக்க 46 (15) ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர். 17.2 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து 183 ஓட்டங் களைப் பெற்று 6 விக்கெட்டுகளால் கண்டி அணி வெற்றிபெற்றது. அகில தனஞ்சய, சமிந்து விக்ரமசிங்க, முஸ்டபிசுர் ரஹ்மான், நுவான் துஷார ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர். போட்டியின் சிறப்பாட்டக்காரராக தசுன் சானக்க தெரிவானார். (04)

# இந்திய அணிக்கு 125 கோடி ரூபா பரிசு வழங்குவது ஏன்? – ஜெய் ஷா விளக்கம்!



இந்திய கிரிக்கெட் அணி கோலாகலமாக நிறைவு பெற்ற ஐசிசி 2024 ரி-20 உலகக் கோப்பையை வென்று சாதனை படைத்துள்ளது.

ஜூன் மாதம் மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் அமெரிக்காவில் நடைபெற்ற அந்தத் தொடரில் லீக் சுற்றில் பாகிஸ்தான் உள்ளிட்ட அணிகளைத் தோற்கடித்த இந்தியா சூப்பர் 8 சுற்றுக்கு தகுதி பெற்றது. அங்கே ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், அவுஸ்திரேலியா ஆகிய அணிகளையும் இந்தியா தோற்கடித்தது.

அதைத்தொடர்ந்து அரையிறுதியில் நடப்பு சம்பியன் இங்கிலாந்தைத் தோற்கடித்த இந்தியா மாபெரும் இறுதிப் போட்டியில் தென்னாபிரிக்காவை 7 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது. அதன்மூலம் 17 வருடங்கள் கழித்து இந்தியா ரி-20 உலகக் கிண்ணத்தை வென்று சாதனை படைத்தது. அத்துடன் கடந்த 10 வருடங்களாக ஐசிசி தொடர்களில் தொடர்ச்சியாக சந்தித்து வந்த அவமானத் தோல்வி வரலாற்றையும் இந்தியா தகர்த்துள்ளது.

அந்த வகையில் வரலாறு படைத்த இந்திய அணிக்கு 125 கோடி ஷரூபா (இந்திய நாணய மதிப்பில்) என்ற பிரம்மாண்ட பரிசுத் தொகையை பிசிசிஐ செயலாளர் ஜெய் ஷா அறிவித்தார். உண்மையில் சம்பியன் பட்டம் பெற்ற இந்திய அணிக்கு ஐசிசி சார்பில் 20.58 கோடிகள் மட்டுமே பரிசாகக் கொடுக்கப்பட்டது. ஆனால், அதை விட 5 மடங்கு அதிகமான பரிசுத்தொகையை தங்களுடைய இந்திய அணிக்கு பிசிசிஐ வழங்கியது. இந்த அறிவிப்பு உலகின் இதர நாட்டு கிரிக்கெட் அமைப்புகளைத் திரும்பிப் பார்க்க வைத்தது என்றே சொல்லலாம்.

இந்நிலையில் 125 கோடி ரூபா பரிசுத்தொகையானது இந்திய வீரர்களுக்கு மட்டுமல்லாமல் பயிற்சியாளர்கள், துணைப் பயிற்சியாளர்கள், அணியைத் தேர்வு செய்த தெரிவுக்குழுவினர் ஆகியோருக்கும் பங்கிட்டு வழங்கப்படும் என்று ஜெய் ஷா தெரிவித்துள்ளார். அத்துடன் 17 வருடங்கள் கழித்து சம்பியன் கிண்ணத்தை வென்றதாலேயே இவ்வளவு பெரிய தொகை அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் விளக்கியுள்ளார்.

இது பற்றி அவர் சமீபத்திய பேட்டியொன்றில், “கடைசியாக 2007 இல் வென்ற நாம் தற்போது 17 வருடங்கள் கழித்து வென்றுள்ளோம். எனவே பிசிசிஐ நிர்வாகிகள் அனைவரிடமும் விவாதித்த பின்பு பரிசுத்தொகை பற்றிய முடிவை எடுத்தோம்.

“நம்முடைய நாட்டில் நாம் கிரிக்கெட்டை ஒரு மதமாகப் போற்றுகிறோம். நமது வீரர்கள் 20 அணிகள் விளையாடிய தொடரில் வென்றுள்ளனர். எனவே அவர்களுக்கு ஏதாவது நாம் செய்ய வேண்டியிருந்தது. அதனாலேயே 125 கோடி பரிசாகக் கொடுக்கப்பட்டது. இது வீரர்கள் துணைப் பயிற்சியாளர்கள், பயிற்சியாளர்கள், தெரிவுக் குழுவினர் ஆகிய அனைவருக்கும் சேரும்” என்று கூறியுள்ளார். (04)

# மாளிகைக்காடு சபீனா முஸ்லிம் வித்தியாலயத்தில் அதிபர் காரியாலயம், நடைபாதை திறப்பு விழா!





மாளிகைக்காடு கமு.கமு சபீனா முஸ்லிம் வித்தியாலயத்தில் புதிய அதிபர் காரியாலயம் மற்றும் புதிதாக அமைக்கப்பட்ட வகுப்பறை கட்டடங்களுக்கிடையிலான நடைபாதை ஆகியவற்றை திறந்து வைக்கும் விழா நேற்று திங்கட்கிழமை (01) இடம்பெற்றது.

பாராளுமன்ற உறுப்பினர் பைசல் காசிம் அவர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு, செலவுத் திட்ட நிகழ்ச்சி திட்டம் - 2024 நிதி ஒதுக்கீட்டின் மூலம் வழங்கிய ஐந்து லட்சம் ஷரூபாய் நிதி உதவியினால் அமைக்கப்பட்ட புதிய அதிபர் காரியாலயம் மற்றும் வகுப்பறை கட்டடடங்களுக்கிடையான நடைபாதை ஆகியவற்றை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பைசல் காசிம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு திறந்து வைத்தார்.

“கல்வி சிறக்கும் வழி திறக்கும் விழா” எனும் தொனிப்பொருளில், மாளிகைக்காடு கமு.கமு. சபீனா முஸ்லிம் வித்தியாலயத்தின் அதிபர் எம்.ஐ.எம். அஸ்மி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹ்துல் நஜீம் கௌரவ அதிதியாகவும், காரைதீவு பிரதேச செயலாளர் திருமதி ராகுல நாயகி சஜிந்திரன் விசேட அதிதியாகவும் காரைதீவு கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஏ. சஞ்ஜீவன் சிறப்பு அதிதியாகவும் பங்கேற்றனர்.

இவர்களோடு கல்முனை வலயக்கல்வி அலுவலக கணக்காளர் மற்றும் பிரதி, உதவி கல்விப் பணிப்பாளர்கள், சாய்ந்தமருது அல்ஹிலால் பாடசாலையின் அதிபர் யூ.எல் நஸார் உட்பட ஏனைய காரைதீவு, சாய்ந்தமருது கோட்டப் பாடசாலையின் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் முன்னிலை அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்தோடு, பாடசாலையின் பிரதி அதிபர், ஆசிரிய, ஆசிரியைகள், பாடசாலை அபிவிருத்தி சங்கம் மற்றும் பாடசாலை சமூகத்தினரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

நிகழ்வை ஆசிரியரும் அறிவிப்பாளருமான ஏ.எல். நயீம் தொகுத்து வழங்கினார்.

# அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடனான பிரதேச முயற்சியாண்மை மகளிர் பற்றிய கலந்துரையாடல்



(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)


கற்பிட்டி பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான சிறு மற்றும் நடுத்தர மகளிர் முயற்சியாண்மை உடையவர்களைத் தெரிவு செய்து வியாபாரத் துறையை மேம்படுத்தும் வேலைத்திட்டம் சம்மந்தமான கலந்துரையாடல் இன்று கற்பிட்டி பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் ஐ.எல் நிசாந்த் தேசப்பிரிய தலைமையில் கற்பிட்டி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது .

மேற்படி வேலைத்திட்டம் பற்றிய தெளிவூட்டலை கொழும்பு பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர் றஞ்ஞன யூ.கே.பியதாச வழங்கியதுடன் இதற்கான நிதி மற்றும் முகாமைத்துவ சேவைகள் யூ.என்.டி.பீ நிறுவனத்தின் மூலமாக வழங்கப்படும் எனவும் இவ் வேலைத்திட்டம் பற்றி மக்களுக்கு முழுமையான தெளிவூட்டல்கள் இலங்கை ஷரூபவாஹினி கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய ஊடகங்கள் வாயிலாக தெளிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளாதாக விரிவுரையாளர் தெரிவித்தார்.

இத்திட்டத்தை அடுத்த மாதம் அளவில் நடைமுறைப் படுத்துவதற்கு தாம் எதிர்பார்ப்பதாகவும் அதற்குரிய தகவல்கள் திரட்டும் செயற்பாடுகளுக்கு இப்பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் முழுமையான ஒத்துழைப்புக்களையும் எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார்.




# பிரான்சு தமிழ்ச்சோலை பள்ளிகளுக்கிடையேயான இல்ல மெய்வல்லுநர் போட்டிகளின் விபரங்கள்



பிரான்சு தமிழர் ஒருங்கிணைப்புக் குழு - தமிழர் விளையாட்டுத்துறையின் ஆதரவில் பிரான்சு தமிழ்ச் சோலைத் தலைமைப் பணியகமும் தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பும் இணைந்து நடாத்துகின்ற பிரான்சு தமிழ்ச்சோலை பள்ளிகளுக்கிடையேயான இல்ல மெய்வல்லுநர் தெரிவுப்போட்டிகள் மற்றும் இறுதிப் போட்டிகள் இரண்டாம் நாளாக 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வித்றி பகுதி விளையாட்டுத் திடலில் அகவணக்கத்துடன் ஆரம்பமாகி சிறப்பாக இடம்பெற்றன.

இப்போட்டியில் மாணவர்கள் சிறப்பாகப் பங்குகொண்டு தமது ஆற்றல்களை வெளிப்படுத்தியதைக் காணமுடிந்தது.

நேற்றைய தினம் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்கள், வெற்றிப் பதக்கங்கள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டது. குறித்த போட்டிகள் கடந்த ஜூன் 29 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகியமை குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு சார்சல் நெல்சன் மண்டேலா விளையாட்டுத் திடலில் இறுதிப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

(பிரான்சு தமிழர் ஒருங்கிணைப்புக்குழு - ஊடகப்பிரிவு)

# இரா. சம்பந்தன் எம். பி. மறைவுக்கு கனடிய தமிழர் பேரவை இரங்கல்



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனின் மறைவுக்கு கனடிய தமிழர் பேரவை இரங்கல் தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பு வெளியிட்டுள்ள தகவல் குறிப்பில்,

இலங்கையின் மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ஆர்.சம்பந்தனின் மறைவிற்கு கனடிய தமிழர் பேரவை ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கின்றது. தமிழ் சமூகத்திற்காக மட்டும் அல்லாது இலங்கையின் அனைத்து மக்களிற்காகவும் தனது வாழ்க்கையை அர்ப்பணித்த இரா. சம்பந்தன்ஐயா, தனதுமக்களின்உரிமைக்காக அசைக்க முடியாத அர்ப்பணிப்புடனும் நேர்மையுடனும் போராடினார்.

சம்பந்தன் ஐயாவின் பங்களிப்புகள் அரசியலுக்கு அப்பாற்பட்டவை. அவர் நம்பிக்கையின் கலங்கரை விளக்கமாகவும், பலருக்கு உத்வேகமாகவும் இருந்தார். தமிழர் நலனுக்கான அவரது தளராத அர்ப்பணிப்பும் பல்வேறு சமூகங்களுக்கிடையில் ஒற்றுமையையும் புரிந்துணர்வையும் ஊக்குவிப்பதற்கான அவரது முயற்சிகள் இலங்கையின் வரலாற்றில் அழியாத தடம் பதித்துள்ளன.

2016 ஆம் ஆண்டில், கனடியத் தமிழர் பேரவை சம்பந்தன் ஐயா அவர்களுக்கு வாழும் நாயகன் விருதை வழங்கியிருந்தது. அவரது முன்மாதிரியான தலைமைத்துவம், தைரியம், மற்றும் சவாலான சூழ்நிலைகளில் சேவை செய்ததைப் பாராட்டி இந்த விருது அவருக்கு வழங்கப்பட்டிருந்தது என்பதையும் இந்த நேரத்தில் நினைவுகூருகின்றோம்.

இரா.சம்பந்தன்ஐயாவின் குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் அவரை இழந்து வாடும் அனைவருக்கும் கனடியத் தமிழர் பேரவையின் சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த இக்கட்டான நேரத்தில் உங்களின் துக்கத்தில் நாங்களும் பங்கு கொள்கிறோம், எதிர்கால சந்ததியினரை அமைதி, நீதி, சமத்துவம் ஆகிய கொள்கைகளை பின்பற்ற அவரது மரபு தொடர்ந்து ஊக்கமளிக்கட்டும்.

கௌரவ இரா.சம்பந்தன் ஐயாவின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கின்றோம். உங்களின் அயராத சேவையும், நிலையான பாரம்பரியமும் என்றென்றும் நினைவுகூரப்படும் – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)







# அச்சுவேலியில் அர்ச்சனைப் பூக்கள் இசைப்பேழை வெளியீட்டு விழா

அச்சுவேலி காட்டுவளவு கந்தசுவாமி மீது பா. அர்ச்சனாவால் எழுதிப் பாடப்பட்ட அர்ச்சனைப் பூக்கள் என்ற இசைப்பேழை வெளியீட்டு விழா நாளை (03) புதன் இரவு 9.15 மணிக்கு காட்டுமலை கந்தசுவாமி ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது.

மன்னார் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஞான. ஆதவன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முதல்வர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசனும் சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் அதிபர் ச.சத்தியவரதன், இலங்கை திறந்த பல்கலைக்கழக விரிவுரையாளர் தயாளினி குமாரசாமி ஆகியோரும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் வரவேற்புரையை அச்சுவேலி மத்திய கல்லூரி அதிபர் கு.ரவிச்சந்திரன் ஆற்றுவார். ஆசியுரையை ஆலயபிரதம குரு சீ.சி.சி.. சிவானந்தம் ஐயர் வழங்குவார். யாழ். பல்கலைக்கழக வருகை விரிவுரையாளர் பண்டிதை தவபாலன் சியாமினி, சைவப்புலவர் கி. வரதராசா ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கவுள்ளனர். ரஜரட்டை பல்கலைக்கழக மாணவி பா.அர்ச்சனா ஏற்புரை வழங்குவார்.






# கதிர்காம பாதயாத்திரிகர்களுக்கு லைக்காவின் ஞானம் உறுதுணை

கதிர்காம யாத்திரைக்கான காட்டுப் பாதை திறக்கும் பராம்பரிய நிகழ்வு கடந்த 30 ஆம் திகதி அன்று இடம்பெற்றது.

உகந்தை முதல் கதிர்காமம் வரையிலான 113 கிலோமீற்றர் காட்டுப் பாதையில் இலட்சக்கணக்கிலான பக்தர்கள் வருடாந்தம் ஆன்மீக நடைப்பயணத்தினை மேற்கொள்வது குறிப்பிடத்தக்கது.

குறித்த நடைப் பயணத்தில் பக்தர்களுக்கு உறுதுணை புரியும் வகையில் குடிநீர் ஏற்பாடு மற்றும் மருத்துவ உதவிப் பொதிகள் லைக்கா ஞானம் அறக்கட்டளையினூடாக வழங்கிவைக்கப்பட்டன.

குறித்த உறுதுணை நடவடிக கைகள் காட்டுப்பாதை திறந்த கடந்த ஞாயிறன்று ஆரம்பித்து வைக்கப்பட்டன.



# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் நிஜங்களின் நிழல்கள் இன்று ஆரம்பம்

இன்று முதல் 4 ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் புகைப்படக் கலைக்கழகத்தினால் நிஜங்களின் நிழல்கள் என்ற நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

இதில் அயற்பாடசாலை மாண வர்களுக்கன புகைப்படத் துறை தொடர்பான செயலமர்வு, புகைப்படக் கண்காட்சி என்பன இடம்பெறுகின்றன




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.07.2024இல் வெளியிடப்பெற்றது.